## IV. ஆளணி

ஆட்சியாளரான திரு. டி. டபிள்யூ. இராஜபத்திரன சர்வதேச நாணய நிதியில் இலங்கையினது மாற்றீட்டு ஆட்சியாளர் என்ற முறையில், கோலாலம்பூரில் நடைபெறும் பொதுநலவரசு நிதிமந்திரிகள் மகாநாட்டில் பங்குபற்றுவதற்காகவும் டோக்கியோவில் நடைபெறும் சர்வதேச நாணயநிதியினதும், சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும், சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்தினதும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினதும் வருடாந்தக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காகவும் ஆவணி 31, 1964ல் கோலாலம்பூருக்கும், டோக்கியோவுக்கும் செல்வதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்டார். அவர் இலங்கைக்கு மீண்டு வரும்போது கௌரவ நிதிமந்திரியான டாக்டர் என். எம். பெரேராவுடன் சீனுவிலுள்ள பீகிங் நகருக்குச் சென்று, புரட்டாதி 22, 1964ல் இலங்கை திருப்பினுர்.

ஆட்சியாளர், 1964ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில், நியுசிலாந்திலுள்ள வெலிங்டனில் நடைபெற்ற தெ. கி. ஆ. நி. அ. ஆட்சியாளர் சபையின் ஆருவது மகாநாட்டில் பங்குபற்றினுர். அவர் ஐப்பசி 29, 1964ல் வெலிங்டனுக்குச் சென்று, கார்த்திகை 10, 1964ல் இலங்கை திரும்பினுர்.

வாஷிங்டனிலுள்ள சர்வதேச நாணய நிதியில் மாற்றீட்டு நிர்வாக இயக்குநராகக் கடமையாற்றிய உப ஆட்சியாளரான திரு. டபிள்யூ. தென்னக்கோன், அந் நிதியில் தமது சேவைக்காலத்தை முடித்துக் கொண்டார். மார்கழி 21, 1964ல் ஸ்ரீலங்கா மகா வங்கியில் அவர் தமது கடமைகளை மீண்டும் ஏற்றுர். அவருக்கு சிரேட்ட உப ஆட்சியாளர் என்னும் பதிவிப்பெயர் வழங்கப்பட்டது.

திரு. டி. சி. குணசேகர உப ஆட்சியாளராக நியமனம் செய்யப்பட்டார். திரு. காமினி கொரியா, இலங்கையிலிருந்து தை 22, 1964ல், கராச்சியில் நடைபெற்ற தெ. கி. ஆ. நி. அ. மகாவங்கித் தொழிற்பாடுகள் பற்றிய ஐந்தாவது பயிற்சிக் கூட்டத்திற்கு ஆலோசனை நிபுணராகப் பங்குபற்றச் சென்று, மாசி 1, 1964ல் இலங்கை திரும்பினுர். அவர், வர்த்தகமும் அபிவிருத்தியும் என்ற பொருள் மீதான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் இலங்கை தூது கோஷ்டியில் ஓர் அங்கத்தவராகப் பங்குபற்றுவதற்காக இலங்கையிலிருந்து பங்குனி 31, 1964ல் ஜெனிவாவுக்குச் சென்று, ஆனி 18, 1964ல் இலங்கை திரும்பினுர். டாக்டர் கொறியா, பொதுநலவரசு நிதிமந்திரிகள் மகாநாட்டிலும், சர்வதேச நாணய நிதி, சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் வருடாந்தக் கூட்டங்களிலும் பங்கு பற்றுவதற்காக, ஆட்சியாளருடன் ஆவணி 31, 1964ல் கோலாலம்பூருக்கும், டோக்கியோவுக்கும் சென்றுர். புரட்டாதி 20, 1964ல் அவர் அங்கிருந்து இலங்கை திரும்பினுர். நியூயோர்க்கில் நடைபெறவிருந்த, வர்த்தகமும் அபிவிருத்தியும் என்ற பொருள் மீதான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் பொதுக் காரியதரிசிக்கு ஆலோசகராகச் செயலாற்றும் பொருட்டு டாக்டர் கொறியா இலங்கையிலிருந்து ஐப்பசி 18, 1964ல் நியூயோர்க் சென்று, மார்கழி 2, 1964ல் இலங்கை மீண்டார்.

மீளப்பார்வையிடும் வருடத்தின்போது, கீழ்க்காணும் மகா வங்கி உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்குக் கடனுகைப் பணியாற்றவோ அல்லது தொடர்ந்தும் அரசாங்கத்திற்குச் சேவை செய்யவோ விடப்பட்டார்கள்:—

திரு. பி. எச். சிறிவர்தன தேசிய திட்ட இயக்குநராகத் தொடர்ந்தும் அரசாங்க சேவையிலிருந்தார்.

இலங்கை நில எரி எண்ணைக் கூட்டுத்தாபனத்திற்குப் பணியாற்ற ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்டிருந்த டாக்டர். டபிள்யு. எம். திலகரத்ன, 1964ம் ஆண்டு, ஆவணிமாதம் 25ம் திகதி முதல், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குப் பொது மனேஜராகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்.

விவசாய உணவு கூட்டுறவு அமைச்சுக்குப் பணியாற்றிய டாக்டர் எம்.ஆர்.பீ. சல்காடோ, 1964ம் ஆண்டு, ஆடிமாதம் 1ம் திகதி மகாவங்கியின் சேவைக்கு மீண்டு வந்தார்.

திரு. பீ. பி. கரந்தவெல நிதியமைச்சில் தொடர்ந்தும் பணியாற்றினர்.

டாக்டர் டி. எம். கன்னங்கரா, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக அமைச்சுக்குப் பணியாற்ற அனுமதியளிக்கப்பட்டார். இதன்பின் அவர் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு ஓர் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார்.

கடந்த காலத்தைப்போலவே, மகாவங்கி உத்தியோகத்தர்கள் பலர் அரசாங்கத்தினல் நியமிக்கப்பட்ட பலதரப்பட்ட குழுக்களில் பங்கு பற்றி அரசாங்கத்துக்குத் தொடர்ந்தும் சேவை செய்தனர்.

**வங்கிக் கட்டடம்:**

மகாவங்கி, 1964ம் ஆண்டின்போது, இராணி வீதியில் உள்ள அதன் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இதற்குமுன், இவ்வங்கி நான்கு வெவ்வேறு இடங்களில் பரந்திருந்தது. இது பொது மக்களுக்குப் பல தடைகளையும், வசதியின்மைகளையும் அளிப்பதற்குக் காரணமாக இருந்தது. இப்போது, புதிய கட்டடத்தில் மகாவங்கி அதற்கெனச் சொந்தமாக நாணயம் வைப்பதற்கான நிலவறைகளைக் கொண்டுள்ளது. அத்துடன் மகாவங்கியின் பெரிய திணைக்களங்களாகிய செலாவணிக் கட்டுப்பாடும் ஊழியர் சேமநிதியும், அவற்றுடன் ஏனைய மகாவங்கித் திணைக்களங்களும் இந்த ஒரே கட்டடத்தினுள் அடங்கியுள்ளன.